சிரமப்படுகிறார்கள். ஒப்பந்தப் புள்ளி பலர் கேட்டாலும் கேட்காவிட்டாலும் ஒன்றிய நிதியிலிருந்தே இந்த கிணற்றை வெட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : காலதாமதமாவதற்குக் காரணம் டெண்டர்கள் கோரப்பட்டும் ஒரே ஒருவர்தான் டெண்டர் கேட்டிருக்கிறார் என்ற காரணத்தினாலேதான். மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியில் இது இருப்பதால் அவர் பல டெண்டர்கள் வருவதற்கு ஏற்பாடு செய்வார் என்று நம்புகிறேன்.

மணி அய்யனார் கோயில், முருகமங்கலம்

* 299 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் முருகமங்கலம் பகுதியிலுள்ள அருள்மிகு மணி அய்யனார் கோயிலை அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின கீழ் எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) மாயூரம் வட்டம், முருகமங்கலம் அருள்திரு ஸ்ரீ மணி அய்யனார் திருக்கொயில் 1974 ஆம் ஆண்டில் சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளது. பரம்பரை அல்லாத அறங்காவலர் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீதிவிடங்கன் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிலைகள்

* 300 வினா—திரு. எஸ். வடிவேல் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் 13—3—1973 அன்று குறுகிய கால வினா எண். 3-க்கு அளித்த விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் தாலுகா வீதிவிடங்கன் கிராமத்தில், புதையலாகக் கண்டுபிடிக்கப்பட்ட சிலைகள் பற்றிய வழக்கு முடிவடைந்துவிட்டதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள தொடர் நடவடிக்கை என்ன?